10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 131 | வெள்ளிக்கிழமை செப்ரெம்பர் 29 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

## நாளை ஹர்த்தால் இல்லை

நாளை ஹர்த்தால் இல்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. நாளை ஹர்த்தால் என அநாமதேய சுவரொட்டிகள் நேற்று நள்ளிரவு யாழ். நகரப் பகுதியில் ஒட்டப்பட்டன. எனினும் நாளை ஹர்த்தால் நடைபெற மாட்டாது என பொது அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

நாளை வழமைபோல பஸ் போக்குவரத்து சேவைகள் நடைபெறும் என்று அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கங்கள் அறிவித்துள்ளன.

அதேவேளை ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கவில்லை என வர்த்தக அமைப்புக்களும் தெரிவித்துள்ளன. (எ)

### சுற்றுலா சென்ற பஸ் விபத்து

# மாணவர்கள் உட்பட 18 பேர் காயம்!



### நால்வரின் நிலை கவலைக்கிடம்

பாடசாலை மாணவர்கள் சுற்றுலா சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் சிலாபம் பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

புத்தளம் - சிலாபம் வீதியில் முந்தலம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியுடன் பஸ் மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகின்றது.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், விபத்தில் காயமடைந்தவர்கள் நொச்சியாகம, ராஜங்கனய பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் மற்றும் பெற்றோர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜங்கனய பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் இருந்து கல்விச் சுற்றுலா சென்று விட்டுத் திரும்பும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. (எ)

## எம்.பி.யின் வாகனம் மோதி ஒருவர் பலி



நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திசாநாயக்க பயணித்த வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை ஒரு மணியளவில் அம்பாறை - கண்டி வீதியில் அம்பாறை, கரங்காவை ஜனரஜ வித்தியாலயத்துக்கு முன்னால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். 06

## தொழில்நுட்ப பீடத்தின் திறப்புவிழா



நெல்லியடி மத்திய கல்லூரியின் தொழில்நுட்ப பீடத்தின் திறப்புவிழாவும் மூன்று மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இன்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.கிருஸ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தொழில்நுட்பப் பீடத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(மேலும் படங்கள் 6ஆம் பக்கத்தில் )

(எ-11)

# 2025 வரை மைத்திரியே ஜனாதிபதி



எதிர்வரும் 2025ஆம் ஆண்டு வரை மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி பதவியில் வைக்கும் வகையில் அரசியலமைப்பில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாகக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறை இரத்துச் செய்தல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல் மற்றும் 2025ஆம் ஆண்டு வரையில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி பதவியில் இருப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்கி, விசேட அதிகாரங்கள் சிலவற்றையும் ஜனாதிபதிக்கு 06

## ஜனநாயக உரிமைகளை மீறுகிறது அரசாங்கம்

அரசாங்கம் ஜனநாயக உரிமைகளை மீறிச் செயற்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தலை ஒத்தி வைக்கும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு பல்வேறு தவறுகளை இழைத்து வருவதாகக் குறிப்பிட்ட அவர் அரசாங்கம் சட்டம் ஒழுங்கை மீறிச் செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டின் அரசியல் சாசனத்துக்கு அமைவாக தேர்தல்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் குறிப்பிட்ட அவர் அரசாங்கம் இரகசியமான முறையில் அரசியல் சாசனத்தில் திருத்தங்களைச் செய்துள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார். (எ)

## சீன-அமெரிக்கப் போரால் இலங்கைக்குப் பேராபத்து



சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முரண்பாட்டு நிலைமை யுத்தமாக வெடிக்கலாம் என எச்சரிக்கை விடுத்துள்ள லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண இரு நாடுகளுக்கிடையிலான இந்த யுத்தத்தில் இலங்கையும் சிக்கக் கூடிய சாத்தியம் உண்டு. அது இலங்கைக்குப் பேராபத்தாக மாறும் எனவும் தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அவர்,

“அமெரிக்காவின் தேவைகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றி வருகிறது. அமெரிக்காவின் தேவைக்கு அமையவே இலங்கையில் பாதுகாப்புச் செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்தை விடவும் தற்போது நாட்டில் பாதுகாப்புச் செலவு அதிகரித்துள்ளது.

திருகோணமலைத் துறைமுகம் தொடர்பில் உடன்படிக்கை கைச்சாத்திட்டு அரசாங்கம் அமெரிக்காவின் தேவைக்கு அமைய படையினருக்கு பயிற்சி அளித்துவருகின்றது.- என்றார். (எ)

தமிழர் தாயகத்தின் முதல் மாலைத் தினசரி




# கட்டுநாயக்க விமான நிலையம்
# சிலமணி நேரம் முடக்கம்

கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகள் சில மணி நேரங்களுக்கு முடங்கிப் போயிருந்ததாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமான நிலையத்தின் கணினி வலையமைப்பில்ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறின் காரணமாக இந்த நிலை நேற்று ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் இந்தத் தொழில்நுட்பப் பிரச்சினை ஏற்பட்டது. பயணிகளின் ஆவணங்களைச் சோதனையிடும் இணையவழி வலையமைப்பிலேயே பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இணையவழி சோதனைகள் முடங்கியதால் உள்வரும், வெளிச்செல்லும் பயணிகளை அனுமதிக்க முடியாமல் அதிகாரிகள் திணறினர்.

அதேவேளை, கட்டுநாயக்க விமான நிலையத்தில், கணினிகளின் கடவுச்சீட்டு விபரங்களைப் பரிசோதிக்க முடியாதிருந்த போதிலும், பயணிகளுக்கான பயண அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (உ)

# கொலைச் சந்தேகம் ஒருவர் கைது!



வெலிஓய இடம்பெற்ற மனிதக் கொலை ஒன்று தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 8ஆம் திகதி வெலிஓய பிரதேசத்தில் நபர் ஒருவர் கூறிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நீண்ட விசாரணையின் பின்னர் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது சந்தேகநபரிடமிருந்து கொலைக்கு பயன்படுத்தப்பட்ட இரும்புப் தடியொன்றும் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் எத்தாவெட்டுனுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# சட்டவிரோத மதுவை தடைசெய்யக் கோரிக்கை



சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையை தடை செய்வதற்குரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் என புதுக்குடியிருப்பு மருதமடுகிராம பெண்கள் கிராம அலுவலரிடம் முறையிட்டுள்ளனர்.

மருதமடு கிராம சேவையாளரின் அலுவலகத்தில் ஒன்று கூடிய கிராமத்து பெண்கள் நேற்றுப் பிற்பகல் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

இதன்போது, சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென கிராமப் பெண்கள் வலியுறுத்தியுள்ளனர். மேலும், இந்தக் கிராமத்து பெண்களுடன் கலந்துரையாடிய கிராமசேவையாளர் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(உ)

# வேலணை ஐயனார் வித்தியாலயத்துக்கு கணினி, உபகரணங்கள் அன்பளிப்பு



வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2017ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் யாழ். வேலணை ஐயனார் வித்தியாலயத்துக்கு இரண்டு இலட்சம் ரூபா ஒதுக்கியிருந்தார்.

அதில் ஒரு இலட்சம் ரூபாய்க்கு கணினி ஒன்றையும், மிகுதி ஒரு இலட்சம் ரூபாய்க்கு வகுப்பறைகளுக்குத் தேவையான அலுமாரிகளையும் வழங்கியுள்ளார். இவ் உதவிப் பொருட்களைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி சுதர்சினி ஜோய்ஸ் நியூட்டன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் பிரான்ஸ் நாட்டு கிளை அமைப்பாளர் நித்தி, லண்டன் நாட்டு பிரதிநிதியான ஜீவன் மற்றும் தமிழ ஈழ விடுதலை இயக்கத்தின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளரும் பிரபல புவியியல் ஆசிரியருமான எஸ் குகதாஸ் ஆகியோர் கலந்துகொண்டனர். (உ)

# அகதிகளை நாம் கைவிடக்கூடாது



அகதிகளாக வந்தவர்களை நாம் கைவிடக்கூடாது. எனவே, சாக்குப்போக்குகளைக் கூறிக்கொண்டிருக்காது அந்த மக்களை அரசு பாதுகாக்க வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தஞ்சம் புகுந்த ரோஹிங்யா முஸ்லிம்கள் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டுள்ள வீட்டை சுற்றிவளைத்த குழுவொன்று அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்டது. இந்தச்சம்பவம் தொடர்பில் வினவியபோதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அகதிகளாக வந்த எவரையும் நாட்டை விட்டு விரட்டக்கூடாது. அதற்கு எதிராகச் செயற்படுவது எமது கலாசாரமும் அல்ல. இந்த விவகாரம் தொடர்பில் அரசும் பொலிஸாரும் இதனைவிட பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

# தேசிய விளையாட்டு விழாவில் மட்டு கபடி அணி வெற்றி



29ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் மட்டக்களப்பு மாவட்ட ஆண்கள் அணி, கபடி சுற்றுத்தொடரில் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அனுராதபுரம் வடமத்திய மாகாண விளையாட்டு கட்டடத்தொகுதியில் நடைபெறும் இச்சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி நேற்று இடம்பெற்றது. காலி கபடி ஆண்கள் அணிக்கும் மட்டக்களப்பு கபடி ஆண்கள் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இறுதிச் சுற்றில் 31:43 என்ற புள்ளிகளை பெற்று மட்டக்களப்பு மாவட்ட அணி வெற்றிபெற்றுள்ளது.

மேலும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.எம்.நிப்ராஸ் முதலிடம் பெற்றுள்ளார். அனுராதபுரம் வடமத்திய மாகாண விளையாட்டு கட்டட தொகுதியில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 29 தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் சகல மாவட்டங்களையும் சேர்ந்த மூவாயிரத்துக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)



# சுமந்திரன் கண்டனம்

இலங்கையில் ரோஹிங்யா அகதிகளின் உரிமை மீறப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அமெரிக்கா சென்றுள்ள அவர் தமது டுவிட்டர் தளத்தின் ஊடாக இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார். அத்துடன், பூஸா தடுப்பு முகாமில் அவர்களைத் தடுத்து வைக்க இலங்கை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தமை தொடர்பிலும் அவர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார். (உ)

# ஸ்பெயினில் வெளிநாட்டவருக்கு அச்சுறுத்தல்




ஸ்பெயினில் வெளிநாட்டவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அச்சுறுத்தல்களால் அந்த நாட்டுக்குக் கடும் பொருளாதாரச் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். ஸ்பெயின் நாட்டைப் பிரித்தானிய சுற்றுலாப் பயணிகள் புறக்கணிக்க நேர்ந்தால் அது பெரும் பொருளாதார நெருக்கடிக்கு வாய்ப்பளித்து விடும் எனவும், இது ஆண்டுக்குச் சுமார் 13 பில்லியன் பவுண்டு நட்டத்தையும் ஏற்படுத்தும் எனவும் கணக்கிட்டுள்ளனர். ஸ்பெயினில் பார்சிலோனா, மஜோர்கா, மெனோர்கா மற்றும் இபிஸா உள்ளிட்ட பகுதிகளில் வெளிநாட்டவர்கள் மீது தாக்குதல்கள் முன்னெடுப்பதும், துஷ்பிரயோகம்செய்வது போன்ற என அச்சுறுத்தல்கள்,சுற்றுலா நபர்களைத் தீவிர வாதிகள் எனவும் அவர்கள் நாட்டை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் கோரிக்கைகளும் எழுந்து வருகின்றன.இந்த நிலையில் வெளிநாட்டவர்கள் மீதான தாக்குதல் அதிகரிக்கும் எனில் ஸ்பெயின் பொருளாதாரம் கடும் வீழ்ச்சியை சந்திக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நேபாளத்தின் வாழும் கடவுள்

நேபாளத்தின் குமாரியாக மூன்று வயதுச் சிறுமி திரிஷ்னா ஷக்யா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.நேபாளத்தில் சிறுமிகளைக் கடவுளாகப் போற்றுவது வழமை, மூன்று வயதில் தெரிவு செய்யப்படும் சிறுமி பூப்படையும் வரை கடவுளாகப் போற்றப்படுவார். இவ்வாறு தெரிவாகும் சிறுமி காத்மாண்டுவின் தர்பார் சதுக்கத்தில் உள்ள மன்னர் அரண் மனையில் தங்க வைக்கப்படுவார், இவர்களது கால்கள் தரையில் பட்டால் பாவமாகும். வருடத்துக்கு 13 முறை மட்டுமே வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவர்.கடந்த 2008ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட சிறுமி பூப்படைந்து விட்டதால், நேபாளத்தின் குமாரியாக நான்கு சிறுமிகள் போட்டியிட்டனர். இதிலே திரிஷ்னா ஷக்யா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு தெரிவாகும் சிறுமியின் இளமைப் பருவம் வீணடிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது, மேலும் பூப்படைந்து வெளியே வரும் சிறுமி உலகத்தை எதிர்கொள்வது கடினமாதாகும். இதனால் சமீப காலமாக இந்த முறைக்கு மக்களிடையே ஆதரவும் குறைந்து வருகின்றது.



# ஜப்பானில் 22 ஆம் திகதி தேர்தல்


ஷின்சோ அபே


யூரிகோ கோய்கி

ஜப்பான் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதாக நேற்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. அடுத்த மாதம் 22ஆம் திகதி தேர்தல் நடைபெறும்.இது குறித்து அபே தெரிவிக்கையில்,

“கடினமான போட்டி இன்று தொடங்கிவிட்டது. ஜப்பான் மக்களை எப்படிப் பாதுகாப்பது என்பதற்கான தேர்தல் இது. வடகொரியாவிடம் இருந்து பெரும் அச்சுறுத்தலைச் சந்தித்து வருகிறோம். ஜப்பானைக் கடலில் மூழ்கடிப்போம் என்று வடகொரியா பகிரங்கமாக மிரட்டுகிறது. ஜப்பான் வான் வெளியில் 2 முறை ஏவுகணைச் சோதனை நடத்தியது வடகொரியா.இந்த மிரட்டலைச் சமாளிக்கவும், வடகொரியா விடயத்தில் கொள்கை ரீதியாகத் தீர்க்கமான முடிவெடுக்கவும் எனது கட்சிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். நமது குழந்தைகளின் எதிர்காலத்துக்காக நாம் போராட வேண்டி உள்ளது எனக் கூறினார். இதற்கிடையில் டோக்கியோ பெண் கவர்னர் யூரிகோ கோய்கி, சமீபகாலமாக ஜப்பான் அரசியல் நடவடிக்கைகளைக் கடுமையாக விமர்சித்து வந்தார். அவர் ‘பார்ட்டி ஆப் ஹோப்’ என்ற புதிய கட்சியைக் கடந்த புதன் கிழமை தொடங்கினார். ஆனால், மக்கள் ஆதரவு அபேவுக்கே அதிகமாகக் காணப்படுகிறது.

# 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு எச்.ஐ.வி.



ஒரு புதிய ஆய்வின் படி, ஐரோப்பாவில் ஐம்பது வயதுக்கு மேற்பட்டோர் மத்தியில் எச்.ஐ.வி. நோய்த் தொற்று அதிகரித்து வருவது கண்டறியப்பட்டுள்ளது. ஐரோப்பிய நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மையத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 2004-2015க்கு இடையிலான காலத்தில் 31 நாடுகளில் நோய்த் தொற்று ஏற்பட்டவர்களின் விகிதங்களை ஆய்வு செய்தனர்.2015 ஆம் ஆண்டில், எச்.ஐ.வி நோயுடன் கண்டறியப்பட்ட ஆறு பேரில் ஒருவர் 50 வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருப்பதாக அவர்கள் கண்டறிந்துள்ளனர். பத்தாண்டுகளுக்கு முன்பு இது பத்தில் ஒன்றாகஇருந்தது.இங்கிலாந்து,ஜேர்மனி உள்ளிட்ட 16 நாடுகளில் , 50 வயதுக்கும் மேற்பட்டவர்கள் எச்.ஐ. வி நோயால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.



# தன்னையே திருமணம் செய்த பெண்

இத்தாலியில் 40 வயதான பெண் ஒருவர் தமக்கு உகந்த வரன் இதுவரை கிடைக்காததால் தன்னையே திருமணம் செய்து கொண்ட சுவாரஸ்ய சம்பவம் நடந்துள்ளது. இத்தாலியின் லம்பார்டி நகரில் குறித்த சுவாரஸ்ய சம்பவம் நடந்துள்ளது. உடற்பயிற்சி பயிற்றுநராக இருக்கும் லாரா மெஸ்ஸி கடந்த 20 ஆண்டுகளாகத் தமக்குரிய வரனைத் தேடி வந்துள்ளார். இந்த நிலையில் 20 ஆண்டுகளாக எந்த வரனும் கிடைக்காததால் அவர் வித்தியாசமான இந்த முடிவுக்கு வந்துள்ளார். சம்பவத்தன்று புதுமண பெண் போன்று அலங்காரம் செய்து கொண்டு திருமண மோதிரம் அணிந்து நண்பர்கள் உறவினர்கள் முன்னிலையில் அவர் தனக்கு தானே திருமணம் செய்து கொண்டுள்ளார்.

# பாலியல் தந்தை: 30 வருடச் சிறை

பிரித்தானியாவில் சொந்த மகளையே பல ஆண்டுகள் தொடர்ந்து பாலியல் பலாத்காரம் செய்து கொடுமைப்படுத்திய தந்தைக்கு 30 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டுள்ளது. பிரித்தானியால் 50 வயதாகும் அந்த நபர் தமது மகளுக்கு எட்டு வயதாக இருக்கும் போதே அவருடன் பாலியல் உறவு வைத்துள்ளார்.

அது மட்டுமின்றி அவரது நான்கு பெண் குழந்தைகளையும் அவர் துஷ்பிரயோகம் செய்து வந்தது விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.குத்துச் சண்டை வீரரான அந்த நபர், தமது மகன்களை நேருக்கு நேர் மோதவிட்டு வேடிக்கை பார்ப்பதும், மகள்களைத் துஷ்பிரயோகம் செய்வதுமே அவரது பொழுதுபோக்காகும். மருத்துவ உதவியை நாடினால் அந்தக் காயங்களின் காரணத்தை மருத்துவர்கள் தேடலாம், அது தமக்கு சிக்கலை ஏற்படுத்தும் என அந்தக் குழந்தைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்காமலும் தடுத்துள்ளார்.

22 ஆண்டுகாலம் 1987 முதல் 2009 வரை தொடர்ந்து நரக வேதனை அனுபவித்து வந்த நிலையில் குறித்த நபரின் நான்கு பிள்ளைகளும் தற்போது உளவியல் ரீதியான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.குறித்த நபர் மீதான விசாரணை முடிவுக்கு வந்த நிலையில் கிரவுன் நீதிமன்றம் அவருக்கு 30 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது.

# கண் கலங்கிய ஒபாமா



தனது மூத்த மகள் மலியாவைப் பல் கலைக்கழகத்தில் வாகனத்தில் இருந்து இறக்கிவிட்டபின் தன்னால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ளார்.“அந்த உணர்வு இதயத்தைத் திறந்து அறுவை சிகிச்சை செய்வதைப் போல இருந்தது,” என்று ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் தன் மகளை இறக்கிவிட்ட அந்தத் தருணத்தைப் பற்றி அவர் கூறியுள்ளார்.”ஆனால், பல்கலைக் கழகத்திலிருந்து திரும்பி வரும்போது, இரகசியப் பாதுகாப்புப் பிரிவினர், நான் உணர்ச்சிவசப்பட்டு, மூக்கைத் தேய்த்துச் சிந்திய போது நான் எழுப்பும் ஒலிகளைக் கேட்காதது போல, நேராகப் பார்த்தபடி இருந்தனர்” என்றார் ஒபாமா.

# எம்.எல்.ஏக்கள் தினகரனோடு ஆலோசனை



குடகில் இருந்து சென்னை திரும்பிய, தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்கள், டி.டி.வி. தினகரனைச் சந்தித்து முக்கிய ஆலோசனை நடத்தினர். முதல்வர் பழனிசாமிக்கு ஆதரவை வாபஸ் பெற்ற தினகரன் ஆதரவு எம்எல்ஏக்கள் 18 பேரைத் தகுதி நீக்கம் செய்து சட்டப் பேரவைத் தலைவர் ப.தனபால் அறிவித்தார்.

இதை எதிர்த்து 18 பேரும் தாக்கல் செய்துள்ள வழக்கு, சென்னை உயர் நீதிமன்றத்தில் வரும் 4ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. அவர்கள் 18 பேரும் கர்நாடக மாநிலம் குடகில் உள்ள விடுதியில் தங்கியுள்ளனர். சில நாட்களுக்கு முன்பு குடகுக்குச் சென்ற டி.டி.வி தினகரன், தனது ஆதரவாளர்களைச் சந்தித்துச் சமாதானப்படுத்தினார்.

இந்த நிலையில், தகுதி நீக்கம் செய்யப்பட்ட எம்.எல்.ஏக்களில் வெற்றிவேல், ஏழுமலை, முத்தையா, தம்பிதுரை, சுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம் ஆகியோர் நேற்று சென்னை அடையாரில் உள்ள டி.டி.வி தினகரன் வீட்டுக்கு வந்தனர். அங்கு தினகரனைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினர்.

இந்த ஆலோசனையில், தகுதி நீக்கம் செய்யப்படாத தினகரன் ஆதரவு எம்எல்ஏக்களான அறந்தாங்கி ரத்தினசபாபதி, விருத்தாசலம் கலைச்செல்வன் ஆகியோரும் கலந்துகொண்டனர். பேரவைத் தலைவரின் உத்தரவை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒக்ரோபர் 4 ஆம் திகதி விசாரணைக்கு வர உள்ளது. நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆதரவாளர்கள், வழக்கறிஞர்களுடன் தினகரன் தீவிர ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது.

# வடக்கின் பெருந்தொடர் நாளை ஆரம்பம்

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் பிரான்ஸ் தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்டத் தொடர் நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

நாளையும், நாளைமறுதினமும் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் மொத்தம் 24 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கின்றன. யாழ். துரையப்பா விளையாட்டரங்கம் மற்றும் அரியாலை பயிற்சி உதைபந்தாட்ட மைதானம் ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறவுள்ளன. (ஐ)

# 'யாழில் கில்லாடி யார்?' இறுதியில் நடப்புச் சம்பியன்



'யாழின் கில்லாடி யார்?' உதைபந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்குக் குருநகர் பாடுமீன்விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்திவரும் 'யாழின் கில்லாடி யார்?' உதைபந்தாட்டத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் நேற்று இரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் யாழின் பலம் வாய்ந்த குருநகர் பாடுமீன் மற்றும் இளவாலை யங்ஹென்றிஸ் கழகங்கள் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில், பெரும் போராட்டத்துக்கு மத்தியில் நடப்புச்சம்பியனான பாடுமீன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றிஸை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. (ஐ)

# வடக்கின் மகுடத்தில் டயமன்ஸ் அதிரடி



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில், டயமன்ஸ் விளையாட்டுக் கழகம், ஜோசப் வாஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றது.

நேற்று இரவு நடைபெற்ற லீக் சுற்று ஆட்டம் ஒன்றில் ஜோப்வாஸ் ஐக்கிய விளையாட்டுக் கழகம் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துக் களமிறங்கியது.

இந்த ஆட்டத்தில் எதிரணியின் கோல் எல்லைக்குள் பந்துகளைப் புகுத்திக்கொண்டிருந்த டயமன்ஸ், 6:1என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வென்றது. (ஐ)

# திருக்குமரனில் பைவ் ஸ்ரார், ஐயனார் வெற்றி

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் பைவ் ஸ்ரார் மற்றும் ஐயனார் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

நேற்று இரவு நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில், பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக் கழகம் மோதியது. இதில், பைவ் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 7:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுள்ளது.

மற்றொரு போட்டியில் வேலணை ஐயனார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஊரெழு பாரதி விளையாட்டுக் கழகம் மோதியது.

இதில் ஐயனார் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)

# கட்டுப்படுத்தினோம் ஆனால் தோற்றுவிட்டோம்



"நான்காவது போட்டியில் நாம் நினைத்தது போல் ஆஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவு கட்டுப்படுத்தியபோதும், துடுப்பாட்டம் சரியாக அமையாதமையே தோல்விக்கான காரணமாக அமைந்துவிட்டது" என இந்திய அணித்தலைவர் கோலி தெரிவித்துள்ளார்.

இந்திய - ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வியினால் முதலிடத்தில் இருந்த இந்திய அணி தற்போது இரண்டாம்இடத்துக்குத் தள்ளப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்திய அணியின் தோல்விக்குப் பிறகு அணித்தலைவர் கோலி, தோல்வி குறித்து விளக்கமளித்தார்.

"முதல் 30 ஓவர்களில் ஆஸ்திரேலிய அணி மிகப் பலமான இடத்தில் இருந்தது. அந்த நிலையில் அவர்களை 350 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த வேண்டும் என நினைத்தோம். அதைச் சிறப்பாக செய்து முடித்தோம். எங்கள் அணிக்கும் நல்ல தொடக்கம் கிடைத்தது.

எனினும், அதன் பிறகு பெரியளவில் இணைப்பாட்டம் அமையாததால் தோல்வியைத் தவிர்க்க முடியவில்லை. ஏற்கெனவே தொடரை வென்று விட்டதால்,அணியில் இருக்கும் மற்ற வீரர்களைப் பயன்படுத்துவது என்பதுதான் சரியாக இருக்கும். அதன் படி களமிறங்கிய சமி மற்றும் உமேஷ் யாதவ் ஆகியோர் சிறப்பாகப் பந்து வீசினார்கள் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு எல்லா நாளும் நல்ல நாளாக அமைந்து விடாது. நேற்றும் அது போல் ஒரு நாளாக அமைந்துவிட்டது" என்றார். (ஐ)

# 'காஞ்சனா 3'இல் ஓவியா



ஓவியா குறித்து வந்த புதிய தகவலின்படி, பேய்ப் படங்களில் பெரும் வெற்றியைப் பெற்ற ராகவா லோறன்ஸின் 'காஞ்சனா' பட வரிசையில் மூன்றாவது பாகத்தில் ஓவியா நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.(ஒ)



# 'பிக்பாஸ்': வெளியேறினார் 'செல்லப்பிள்ளை'



"பிக்பாஸ்" நிழ்ச்சி நாளை சனிக்கிழமை முடிவடையவுள்ள நிலையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று வரை சினேகன், கணேஷ், பிந்துமாதவி, ஹரிஸ் மற்றும் ஆரவ் ஆகியோர் போட்டியில் இருந்தனர்.

100ஆவது நாள் நான்கு பேர் மாத்திரமே இருப்பர் என ஏற்கனவே கமல்ஹாசன்சொன்னது போல், நேற்று ஒருவர் வெளியேறப்பட்டு, நான்கு பேர் இறுதியாக உள்ளனர்.

இதன்படி நேற்று இரவு நடைபெற்ற வெளியேற்றப் படலத்தில், சிக்கிக்கொண்டவர் பிந்துமாதவி.

அதற்கு முன்னர் அனைவருக்கும் 'சில விருதுகள் வழங்கப்பட்டன. அதில், குறிப்பாக சினேகனுக்கு 'அணைக்கும் கரங்கள், ஆரவுக்கு 'காதல் மன்னன்', கணேஷுக்கு 'ஒழுக்கமானவர்', 'ஹரிஷுக்கு 'சுட்டி', பிந்துமாதவிக்கு 'செல்லப்பிள்ளை' என்ற பட்டங்களுடன் விருதுகள் வழங்கப்பட்டன. (ஒ)

# சென். அன்ரனிஸ் தொடர்: மனோகரா, செல்சிற்றி கலக்கல்





மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்றைய ஆட்டங்களில், மனோகரா மற்றும் செல்சிற்றி விளையாட்டுக்கழகங்கள் வெற்றி பெற்றன.

சுனாமியால் இறந்தவர்களினதும் கழகத்தின் மறைந்த வீரர்களினதும் நினைவாக மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் உதைபந்தாட்டத் தொடரை நடத்திவருகிறது.

இதில் நேற்று நடைபெற்ற முதலாவது போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வரணி நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிவடைந்தது. இதனால் பின்னர் வழங்கப்பட்ட 'பனால்டி' உதையில் மனோகரா 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில், கிராஞ்சி செல்சிற்றி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் கிராஞ்சி செல்சிற்றி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.


ஆட்டநாயகனாக கிராஞ்சி செல்சிற்றி வீரரான யனுசன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)



## நடமாடும் தேங்காய் வியாபாரம்

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் நடமாடும் வாகனங்களைப் பயன்படுத்தி தேங்காயை விற்பனை செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெங்கு உற்பத்தி அதிகார சபைக்கு உத்தரவிட்டுள்ளார். ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை தொடர்பிலான கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார். தேங்காய் விலை அதிகரிப்பு பற்றி உடனடியாக கவனம் செலுத்துமாறும் இதன்போது ஜனாதிபதி தெங்கு உற்பத்தி அதிகார சபைக்கு பணிப்புரை வழங்கினார். (உ)

## இன்றைய கருத்தோவியம்




## ஜனாதிபதி தலைமையில் முதியோர் தின விழா



சர்வதேச முதியோர் தின விழாவின் பிரதான நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற வுள்ளது. சர்வதேச பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற வுள்ள இந்த நிகழ்வில் ஆற்றல், பங்களிப்பு, பங்கு பற்றலின் ஊடாக எதிர் காலத்தில் கால் பதிப்போம் என்ற தொனிப்பொருளில் நிகழ்ச்சி ஏற்பாடாகி உள்ளதென்று நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்தார். இலங்கையின் சனத்தொகையில் 14 சதவீதத்துக்கு மேலானவர்கள் முதிய வர்களாக இருக்கின்றனர். எண்ணிக்கையின் அடிப்படையில் இது 14 இலட்சமாகும். இவர்களில் 90 சதவீதமானோர் குடும்பங்களில் வாழ்ந்த போதும், பூஜ்ஜியம் தசம் மூன்று சதவீதமானோர் முதியோர் இல்லங்களில் காலத்தை கழிக்கின்றார்கள். இதன் காரணமாக முதியோர் இல்லங்களை மேம்படுத்தி அவற்றை மீளமைப்பது பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதென அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (உ)

# நாங்கள் தாக்கியதை நிரூபிக்க முடியுமா?

ரோஹிங்யா அகதிகளை நாங்கள் தாக்க வில்லை. முடியுமானால் நாங்கள் அவர்களை தாக்கியதாக அரசாங்கம் நிரூபிக்கட்டும் என சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்தார். சிங்கள ராவய அமைப்பு நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரித்த அவர், கல்கிஸை பிரதேசத்தில் ரோஹிங்கியா முஸ்லிம்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்தது. அதன் பிரகாரம் நாங்கள் அங்கு சென்று கல்கிஸை பொலிஸில் இது தொடர்பாக வினவினோம். ஆனால் பொலிஸார் இது தொடர்பாக எதுவும் தெரியாது என எங்களிடம் தெரிவித்தனர். அதன் பின்னர்தான் நாங்கள் அவர்கள் இருக்கும் இடத்தை கண்டறிந்து அவர்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றுமாறு தெரிவித்தோம். அத்துடன் இவர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகள் தங்கவைக்கப்படும் முகாமில் அவர்களின் கட்-டுப்பாட்டில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அப்படியானால் அவர்கள் அகதிகள் முகாமில் தங்கவைக்-கப்படவேண்டும். அவர்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். அந்த இடத்தில் ஐக்கிய நாடுகளின் கொடி தொங்கவிடப்படவேண்டும். அவ்வாறு எதுவும் இங்கு இடம்பெறவில்லை. - என்றார். (உ)

## நாயின் வாயில் சிசுவின் சடலம்

சிசுவின் சடலத்தை நாய் இழுத்துச்செல்வதைக் கண்ட மக்கள் பொலிஸருக்கு அறிவித்ததையடுத்து பிறந்து ஒரு நாளேயான ஆண் சிசுவின் சடலமொன்றை நோர்வூட் பொலிஸார் மீட்டுள்ளனர். நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேர்கசோல்ட் தோட்ட எல்படை கீழ் பிரிவிலேயே நேற்று மாலை 4 மணியளவில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. குடியிருப்புகளை அண்மித்த வாசிகசாலைக்கு அருகிலுள்ள வீட்டுத் தோட்டமொன்றிலிருந்தே சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன் சிசுவின் தலைப்பகுதியை காணவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சிசுவின் சடலத்தை நாய் ஒன்று இழுத்து செல்வதைக் கண்ட பிரதேச மக்கள் நோர்வூட் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்தே சிசுவின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர். பிரதேச தாதியரின் உதவியுடன் சிசுவின் தாயை கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நோர்வூட் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (உ)

## ஜப்பானில் தொழில்வாய்ப்பு பெற்றுத்தருவதாக மோசடி

ஜப்பானில் தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்கான எந்த வேலைத் திட்டமும் நடைமுறைப்படுத் தப்படுவதில்லை என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது. ஜப்பானில் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காகப் பிரதமர் அலுவலகத்துடன் இணைந்த வேலைத்திட்டத்தை தாம் நடைமுறைப்படுத்துவதாகக் கூறி, தனிநபர்களும் நிறுவனங்களும் மக்களை ஏமாற்றி வருவதாகப் பிரதமர் அலுவலகம் சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த தனிநபர்களுக்கோ நிறுவனங்களுக்கோ அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.இவ்வாறானவர்கள் பற்றி தகவல்கள் தெரிந்தவர்கள் அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு செய்யுமாறு அலுவலகம் பொது மக்களைக் கேட்டுள்ளது.(உ)

## 95 மில்லியன் செலவில் பாடசாலை புனரமைப்பு

மலையகத்தில் உள்ள பழமையான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பாடசாலைகளில் ஒன்றான புஸ்ஸல்லாவ சரஸ்வதி மத்திய கல்லூரி 95 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் நிகழ்வு நேற்று கொழுப்பு இந்திய உயர் ஸ்தானிகர் காரியாலயத்தில் நடைபெற்றதாக இராஜாங்க கல்வி அமைச்சர் வே.இராதா கிருஸ்ணன் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் இந்திய உயர் ஸ்தானிகர் தரன்ஜித்சந்துக்கும் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சிக்கும் இடையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியோக செயலாளர் இராதாகிருஸ்ணன் திவாகரன் உதவி இந்திய உயர் ஸ்தானிகர் கல்வி அமைச்சின்பாடசாலைகளின் கட்டட அபிவிருத்தி பணிப்பாளர் கலாநிதி அபேசுந்தர பிரதான கணக்காளர் ஜயசேகர ஆகியோர் கலந்துக்கொண்டனர். (உ)



## பிக்குகளை விமர்சிப்பதை தவிர்க்க முடியாது

அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடும் புத்த பிக்குகள் தொடர்பில் விமர்சிக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்றுபீல்ட் மாசல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். கிரிபத்கொட பிரதேசத்தில் நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், இராணுவத்தில் இருக்கின்ற சில குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கூறினால், முழு இராணுவ வீரர்களையும் குற்றவாளிகளாக சித்தரிக்க கூட்டு எதிர்க்கட்சி முயல்கிறது. அதேநேரம் எந்தவொரு இராணுவ அதிகாரியும் சர்வதேச யுத்த நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லப்படுவதை நான் எதிர்க்கிறேன். எனினும் குற்றமிழைத்தவர்களுக்கு எதிராக நாட்டின் சட்டமுறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்- என்றும் தெரிவித்தார். (உ)

## நாளை நாளும் கோளும்

30.09.2017 சனிக்கிழமை ஏவிளம்பி வருடம் புரட்டாதி மாதம் 14 ஆம் நாள்

தசமி மு.இ. 11.57 வரை | உத்தராடம் மாலை 05.39 வரை | சித்தயோகம் | விஜயதசமி, கேதாரகௌரி ஆரம்பம்

இராகுகாலம் 09.02 - 10.32 | சுபநேரம் 03.02 - 04.32 | எமகண்டம் 01.32 - 03.02

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவனம் | ஆர்வம் | பக்த | அன்பு | உதவி | ஜெயம் | ஆக்கம் | அமைதி | நலம் | நற்செயல் | ஊக்கம் | முயற்சி |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!




### 1998.09.29

இலங்கை, பலாலி விமான நிலையத்தில் இருந்து இரத்மலானை நோக்கி 56 பேருடன் லயன் எயார் பயணிகள் விமானம் புறப்பட்டு 10 நிமிடங்களில் காணாமல் போனது.

## கலைமுகம் வெளியாகியது

கலை இலக்கிய சமூக இதழான கலைமுகம் ஜூலை - செப்ரெம்பர் இதழ் வெளியாகியுள்ளது. 63 ஆவது இதழாக வெளிவந்திருக்கும் இந்த இதழில் பல்வேறு அம்சங்களைத் தாங்கியதாக வெளியாகியுள்ளது. கலைமுகம் இதழை அனைத்து புத்தக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.




## பெரும் கூச்சல் குழப்பத்துடன் கிழக்கு அவை நிறைவு

நாளை நள்ளிரவுடன் பதவிக் காலம் முடிவடையவுள்ள கிழக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு நேற்று நடைபெற்றது. எனினும் அற்றைய அமர்வு பெரும் கூச்சல் குழப்பத்துடன் நிறைவடைந்துள்ளது. இன்று 86ஆவது அமர்வு நடைபெறும் என நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் நேற்றைய 85 ஆவது அமர்வுடன் இறுதி அமர்வு முடிவடைந்தது. நேற்றைய அமர்வில் அவசர பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றிய மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அகமட் "மாகாண சபையின் அதிகாரம் ஆளுநரிடம் தொடர்ந்து இருக்க கூடாது. விரைவாக தேர்தல் நடத்தப்பட வேண்டும்," என்றார். சட்டத் திருத்தங்கள் எனக் கூறிக் கொண்டு காலத்தை இழுத்தடிக்காமல் அரசாங்கம் தேர்தலை நடத்த வேண்டும்," என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார். (உ)

## குற்றவாளிகள் வெளியிலா? மாவைக்கு ஆச்சரியம்!

குற்றம் சுமத்தப்பட்டவர்களுக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டாலும் குற்றவாளிகள் பலர் வெளியில் இருப்பதாக குற்றவாளிகள் தெரிவித்துள்ளார்கள். இது ஆச்சரியத்துக்குரிய விடயம். அதன் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

அவ்வாறு ஏதேனும் இருந்தால் விசாரிக்கப்பட்டுத் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும். என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் கணினிக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர், 'இனியும் இந்த கொடூரச் செயல்கள் நடைபெறக் கூடாது என்பதற்காகப் புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலைக்குக் காரணமான ஏழு பேருக்கும் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மரண தண்டனை தீர்ப்பு வரவேற்கத்தக்க விடயம். வித்தியா எப்படி படுகொலை செய்யப்பட்டாள்? என்பதை அவளின் சடலம் இருந்ததைப் பார்த்து அனைவரும் கண்ணீர்விட்டு அழுதோம். அதை விட முக்கியமான விடயம் அந்த குற்றத்தை மேற்கொண்டவர்கள் மதுவுக்கும் போதைவஸ்துக்கும் அடிமையானவர்களாக இருந்திருக்கின்றார்கள். ஆனால் விடுதலைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் இலட்சக்கணக்கான உயிரைக் கொடுத்த எமது மக்களுக்கு மத்தியில் இவ்வாறான துயர சம்பவங்கள் நடைபெறுவது கவலைக்குரிய விடயம் - என்றார். (உ)

## அமெரிக்க - இலங்கை கடற்படைகள் சந்திப்பு



அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் கப்பல்படைப் பிரதிநிதியான லெப். கொமாண்டர் ரூபென் புலோப்வ்ஸ்ரெய்ன் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். இலங்கைக் கடற்படைத் தலைமையகத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இலங்கைக் கடற்படையினர் மற்றும் அமெரிக்கக் கடற்படை புலனாய்வுப் பணியகம் மற்றும் அமெரிக்க பசுபிக் கடற்படை ஆகியவற்றுக் கிடையில், புலனாய்வு விடயங்கள் தொடர்பான நிபுணத்துவ பரிமாற்றத் திட்டத்தின் கீழ் ஒரு கட்டமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் கடற்படை ஆலோசகர் லெப்.கொமாண்டர் பிரையன் பேஜூம் கலந்துகொண்டார்.(உ)

## பருத்தித்துறைப் பிரதேச செயலக வாணி விழா



பருத்தித்துறைப் பிரதேச செயலக ஊழியர் நலன் புரிச்சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வாணி விழா நலன்புரிச் சங்கத் தலைவர் பொ.குகதாஸ் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பருத்தித்துறைப் பிரதேச செயலரும் நலன்புரிச்சங்க போசகருமான ஆ.சிறி, உதவி திட்டமிடல் பணிப்பாளர், கணக்காளர்,நிர்வாக உத்தியோகத்தர்,உதவி மாவட்ட பதிவாளர், சமுர்த்தி முகாமையாளர்கள்,நிர்வாக கிராம அலுவலர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர். (உ-11)

## தொழில்நுட்ப பீடத்தின் திறப்புவிழா








(எ-11)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எம்.பி.யின்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் விபத்தில் படுகாயமடைந்து அம்பாறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் உகன, திஸ்ஸபுர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. காயமடைந்த மற்ற நபர் அதே வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினருக்குக் காயம் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை.

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரின் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

**2025 வரை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கும் அரசியல் கட்சித் தலைவர்கள் சிலர் கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

சமகால ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி வரையில் உள்ள நிலையில், 2019ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பை சமர்ப்பித்துக் கொள்வதற்கும், அந்த அரசியலமைப்புக்கமைய ஒரே முறையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்காமல் நடவடிக்கை சிலவற்றை மேற்கொள்ளவதற்கும் யோசனை செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதிக்கு பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கு பதிலாக புதிய முறைமையின் கீழ் நாடாளுமன்றில் வாக்கெடுப்பு நடத்தி ஜனாதிபதியை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி பதவிக்கு மைத்திரிபால சிறிசேனவை நியமிப்பதற்கே பிரதான கட்சிகள் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## எதிரொலியின் வாணி விழா




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 29.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.